### இந்திய விடுதலைக்கு காந்தியடிகளுக்கு ஊக்கமளித்த

# நாகப்ப படையாட்சியாரின் நினைவு நாள் நிகழ்ச்சி!

## படத்தை திறந்து வைத்து பொன்குமார் புகழஞ்சலி செலுத்தினார்!

சென்னை, ஜுலை 9-

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு காந்தியடிகளுக்கு ஊக்கமளித்த மயிலாடுதுறை நாகப்ப படையாட்சியார் அவர்களின் நினைவு நாள் பேரணி மற்றும் நிகழ்ச்சி 06.07.2024 அன்று மயிலாடுதுறையில் நடைபெற்றது. கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் பொன்குமார் நாகப்ப படையாட்சியார் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். பல்வேறு தலைவர்கள் நிகழ்ச்சியில் புகழஞ்சலி செலுத்தினர்.

தென்னாப்பிரிக்காவில் அந்த நாட்டு பூர்வீகக் குடிகளான கருப்பர்கள் மற்றும் இந்தியர்களுக்கு எதிரான ஆங்கிலேய அரசின் அடக்கு முறைகளை எதிர்த்து தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் மேற்கொண்ட சத்தியாகிரகப் போராட்டத்தில் காந்தியடிகளுக்கு உற்ற பக்கபலமாக இருந்து போராட்டத்தில் பங்கு கொண்டு முதல் களப்பலியானவர் மயிலாடுதுறை நாகப்பப்படையாச்சி ஆவார். காந்தியடிகள் நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தில் முதன்மையானவராக இருந்து போராட்டம் நடத்தியதால் சிறை படுத்தப்பட்டவர். சிறையில் ஆங்கிலேய அரசின் கொடுமைகளுக்கு ஆளாகி உடல்நலம் கடுமையாக பாதிக்கப்பட்டு, இறந்து போனார். அவருடைய இறப்பு சத்தியாகிரகம் போராட்டத்திற்கு ஒரு புத்துயிரை அளித்தது. நாகப்பன் போன்றவர்கள் இல்லையென்றால் நமது சத்தியாகிரகப் போராட்டம் இந்த அளவிற்கு வெற்றிப் பாதையில் சென்று இருக்க வாய்ப்பு இல்லை என்று காந்தியடிகளே குறிப்பிட்டுள்ளார்.

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற காந்தியடிகளின் சத்தியாகிரகப் போராட்டம் தான் இந்திய விடுதலைக்கு ஊக்கமளித்து, விடுதலையைப் பெற்று தந்தது. எனவே இந்திய விடுதலைக்கு காந்தியடிகளுக்கு ஊக்கமளித்தவர் மயிலாடுதுறை நாகப்பனாவார். அவருடைய நினைவு நாள் ஜுலை 6ஆம் தேதியாகும். அந்த நாளை ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடி அவருடைய தியாகத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் பணியை சமூகநீதி சத்திரியர் பேரவை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மயிலாடுதுறையில் பேரணி மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தியாகி நாகப்ப படையாட்சியார் நினைவு நாள் நிகழ்ச்சி 06.07.2024 அன்று கொள்கைப்பரப்புச் செயலாளர் ஜெகமுருகன் தலைமையில் நடைபெற்றது. சீர்காழி வழக்கறிஞர் இ. செல்வராஜ், ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் ஆர். கலியமூர்த்தி, வன்னியர் மேம்பாட்டு இயக்கத் தலைவர் லோகசம்பத், நாகப்ப படையாட்சி இளைஞர் மன்ற நிர்வாகி ஜெ.ஜெயமணி ஆகியோர் முன்னிலையில், மாவீரன் குரு வன்னியர் சங்கம் செயலாளர் இரா. சங்கர் வரவேற்று பேசினார். TKTMS மாவட்டத் தலைவர் பா.அல்போன்சா, மாநிலத் துணைத் தலைவர் எஸ். ஆனந்தஜோதி, அமைப்புசாரா மாவட்டத் தலைவர் கே.மஞ்சுளா ஆகியோர் குத்து விளக்கு ஏற்றினர்.

தலைவர் பொன்குமார் நாகப்பபடையாட்சியார் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவீரன் குரு வன்னியர் சங்கத் தலைவர் பி.ஜி.க.மணி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர். கூட்டத்தில் கீழ்க்கண்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம்:1**

**நாகப்ப படையாட்சியாரின் தியாகம் அங்கீகரிக்கப்படவில்லை**

இந்திய விடுதலைக்குக் காரணமான சத்தியாக்கிரகப் போராட்டத்தை காந்தியடிகள் வடிவமைத்து அதை முதன் முதலில் செயல்படுத்தியது தென்னாப்பிரிக்கா நாட்டில் தான். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முதலில் பலியானவர் நாகப்பன் படையாட்சி ஆவார்.

மயிலாடுதுறை மாவட்டம், மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் சாமிகண்ணு - கனகம்மாள் தம்பதியருக்கு மகனாக 06.0.1891 அன்று நாகப்பன் படையாட்சி பிறந்தார். தொழிலுக்காக தென்னாப்பிரிக்கா நாட்டிற்கு நாகப்ப படையாட்சி சென்றார்.

தென்னாப்பிரிக்காவில் அதிகாரத்தில் இருந்த ஆங்கிலேயே வெள்ளையர்கள் அந்த நாட்டின் பூர்வீக குடிமக்களான கருப்பினத்தவரையும் அங்கு குடியேறிய இந்தியர்களையும் இரண்டாந்தர குடி மக்களாக நடத்தி வந்தார்கள். இதை எதிர்த்து காந்தியடிகள் போராடி வந்தார்கள். இந்த நிலையில் ஆங்கிலேய முதலாளியால் தாக்கப்பட்டு, பற்கள் உடைபட்ட நாகப்பபடையாட்சியாரின் நண்பர் பாலசுந்தரம் வழக்கை காந்தியடிகள் மூலம் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று வெற்றி பெற்றார். ஆங்கிலேயருக்கு எதிரான இந்தத் தீர்ப்பின் மூலம் தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகப் போராட்டம் எழுச்சி பெற்று, புது வேகம் எடுத்தது. இது இந்திய விடுதலைப் போராட்டத்திலும் எதிரொலித்து, புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் காந்தியடிகளின் சத்தியாகிரகப் போராட்டத்தில் நாகப்பபடையாட்சியார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். காந்தியடிகளின் முக்கிய தளகர்த்தாவாக செயல்பட்டதால் சிறையில் கடுமையாகத் தாக்கப்பட்ட நாகப்பபடையாட்சி 06.07.1909 அன்று இறந்து போனார். நாகப்ப படையாட்சியார் இறப்பு தான் காந்தியடி களுக்கு இந்திய விடுதலை போராட்டத்திற்கு மிகப் பெரிய ஊக்கமளித்தது. நாகப்பன் மரணம் சட்டப்படியான படுகொலை, அந்த வீர இளைஞன் இல்லாது போயிருந்தால் நமது சத்தியாகிரகப் போராட்டம் வெற்றிப் பாதையில் போயிருக்காது என்று காந்தியடிகள் தன் பத்திரிக்கையில் எழுதினார்.

காந்தியடிகளின் போராட்டத்தில் பங்குக் கொண்ட மற்றொரு தமிழ் இளைஞரான நாராயணசாமி 16.10.1910ல் இறந்தார். அதைப்போல புதுச்சேரியை சேர்ந்த வள்ளியம்மாள் என்ற 16 வயது பெண்ணும் காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைப்பட்டார். அவர் நாகப்பன் மறைந்து 5 ஆண்டுகள் கழித்து 22.02.1914ல் இறந்து போனார். நாகப்ப படையாட்சியார் மறைந்து 5 ஆண்டுகளுக்கு பிறகு மறைந்த தில்லையாடி வள்ளியம்மாளை அங்கீகரித்து அரசு அவருக்கு வழங்கிய முக்கியத்துவத்தை முதல் களப்பலியான நாகப்பபடையாட்சியாருக்கு வழங்காதது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது.

நாகப்ப படையாட்சி நினைவைப் போற்றும் வகையில் தென்னாப்பிரிக்காவில் ஜோகன்னஸ் பார்க் நகரத்தில் அவருக்கு நினைவு மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. அதனை காந்தியடிகள் இந்தியாவுக்கு திரும்புவதற்கு முன்பு 1914 ஆம் ஆண்டு திறந்து வைத்தார். இப்படிப்பட்ட வரலாற்றுக்கும், தியாகத்திற்கும் சொந்தக்காரரான நாகப்பபடையாட்சியாரின் தியாகமும், வரலாறும் உரிய முறையில் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை இந்த மன்றம் மிகுந்த வேதனையோடு பதிவு செய்கிறது.

**தீர்மானம்:2**

**பள்ளிப்பாடப் புத்தகத்தில் நாகப்ப படையாட்சி வரலாறு**

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு காந்தியடிகளுக்கு ஊக்கமளித்த மேற்படி தியாகத்திற்கும், வரலாற்றுக்கும் சொந்தக்காரரான மயிலாடுதுறை நாகப்பபடையாட்சியாரின் வரலாற்றையும் அடுத்த தலைமுறை அறிந்து கொள்ளும் வகையிலும் அவரது தியாகத்தையும் வரலாற்றையும் அங்கீகரிக்கும் வகையிலும் அரசின் பள்ளி பாடப் புத்தகத்தில் நாகப்பபடையாட்சியாரின் தியாக வரலாறு இடம்பெற்றிட உரிய நடவடிக்கை எடுத்திட தமிழ்நாடு அரசை இந்த கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம்:3**

**மயிலாடுதுறையில் நாகப்ப படையாட்சியாருக்கு சிலை**

இந்தியாவிற்கு விடுதலைப் பெற்றுத் தந்த காந்தியடிகள், அதற்குப் பயன்படுத்திய போராட்டம் சத்தியாகிரகமாகும். அந்த சத்தியாகிரகத்தை சோதனை அடிப்படையில் வடிவமைத்தது தென்னாப்பிரிக்க நாட்டிலாகும். தென்னாப்பிரிக்க நாட்டில் காந்தியடிகள் நடத்திய அந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் மயிலாடுதுறை நாகப்பப்படையாட்சி அவர்கள் தீவிரமாக பங்கு கொண்டு சிறை சென்று முதல் களப்பலியானார். அதன் மூலம் அந்த சத்தியாகிரகப் போராட்டம் மகத்தான வெற்றி பெற்றது. இதனால் இந்திய சுதந்திரப் போராட்டம் புதிய வடிவகம் பெற்றது. இப்படி இந்திய விடுதலைக்கு போராடிய காந்தியடிகளுக்கு ஊக்கமளித்த தியாகி நாகப்பபடையாட்சி அவர்களுடைய தியாகத்தை போற்றும் வகையில் அவருக்கு மயிலாடுதுறையில் முழு உருவ வெண்கலச் சிலையை அமைத்திட வேண்டுமென தமிழக அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 4**

**மயிலாடுதுறை பேருந்து நிலையத்திற்கு நாகப்ப படையாட்சியார் பெயர் சூட்டுக**

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு முதல் களப்பலியாகி இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தி காந்தியடிகளின் சத்தியாகிரகப் போராட்டத்திற்கு மிகுந்த ஊக்கமளித்த நாகப்பபடையாட்சியாரின் தியாகத்தை நினைவு கூரும் வகையில் மயிலாடுதுறையில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு நாகப்பபடையாட்சியார் பேருந்து நிலையம் என பெயர் சூட்டிட வேண்டுமென தமிழ்நாடு அரசை இந்த கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து வில்லிவாக்கம் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், பகுதிச் செயலாளர் வே. வாசு ஆகியோர் வீதி வீதியாக வாக்குச் சேகரித்தனர். இதில் வேதா, தீன தயாளன், முருகேசன், சிவா, தீபக், புனிதவதி எத்திராசன், சுதா தீனன், ராஜேஸ்வரி ஶ்ரீதர், சரிதா மகேஷ், ந.குமார், கு.இளங்கோ, முனுசாமி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு ஸ்கூல் ஹாக்கி லீக், ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு உடன் இணைந்து நடத்திய "தமிழ்நாடு ஸ்கூல் ஹாக்கி லீக் மாவட்ட அளவிலான போட்டிகள் மாநிலம் முழுதும் நடந்து நிறைவு பெற்றது. மாநிலம் முழுவதும் இருந்து 306 பள்ளிகள் இந்த போட்டியில் கலந்து கொள்வதற்காக பதிவு செய்தனர். இதில் 81 பள்ளிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளாகும். முதல் இடம் பிடித்த அணிகள் அடுத்த வாரம் நடைபெறும் மண்டல அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். இந்த வெற்றியானது அரசுப் பள்ளி மாணவர்களுக்கும், அடுத்த தலைமுறை ஹாக்கி வீரர்களுக்கும் மிகுந்த உத்வேகம் அளிக்கும் என்றும் – மாணவர்கள் பலர் முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றிகள் தெரிவித்தார்கள் என்றும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

### நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில்

# முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வழிகாட்டும் பயிற்சி முகாம்!

நாமக்கல் ஜுலை 9 -

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. + 2 முடித்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக சேர்க்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு வரும் புதன்கிழமை அன்று வகுப்புகள் தொடங்கவும், அதற்கு முன்பு மாணவ, மாணவிகளுக்கு புத்தாக்க பயிற்சி மற்றும் வழிகாட்டும் பயிற்சி நடத்தப்பட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதன்படி, கல்லூரி கல்வி இயக்குனர் செ.கார்மேகம், பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு கல்லூரிகளுக்குள் கனவுகளுடன் வரும் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகளை உற்சாகப்படுத்தும் வகையில் உயர்கல்வியின் அனைத்து அரசு கலை அறிவியல் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு முதல் 7 நாட்களுக்கு வழிகாட்டும் பயிற்சி நடத்தப்பட வேண்டும் என அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மண்டல கல்லூரி கல்வி இயக்குனர் அனைத்து அரசு கலை அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

இந்த வழிகாட்டும் பயிற்சி முகாமில் சமூகத்தின் அனைத்து துறைகளி லும் வலுவான பல்வேறு சாதனையாளர்களை ஆசிரியர்கள், ஆய்வறிஞர்கள், அரசியல் ஆளுமைகள், தொல்லியலாளர்கள், விஞ்ஞானிகள், கல்வி வழிகாட்டுனர்கள், தன்னம்பிக்கை பேச்சாளர்கள், தடைகளை தாண்டி வெற்றி பெற்றுள்ள மூன்றாம் பாலினத்தார், உளவியல் நிபுணர்கள், தொழிலதிபர்கள், விளையாட்டு வீரர்கள், கலை இலக்கியவாதிகள், பல்துறை கலைஞர்கள், பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் முன்மாதிரி பெண் ஆளுமைகள் அமைச்சர்கள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர்கள் காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் மாணவர்களுடன் உரையாடி வழி காட்ட வேண்டும் வழி காட்ட வேண்டும் என கூறியுள்ளார்.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் அரசு கலை அறிவியல் கல்லூரியில் கடந்த இரண்டு நாட்களாக முதலாம் ஆண்டு கல்லூரியில் சேர்க்கப்பட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கான புத்தாக்க பயிற்சி மற்றும் வழிகாட்டும் பயிற்சி நடைபெற்று வருகிறது.

அதன்படி நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகளுக்கான புத்தாக்க பயிற்சி மற்றும் வழிகாட்டும் பயிற்சி முகாம் கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ.ராஜா வழிகாட்டுதலின்படி கம்ப்யூட்டர் சயின்ஸ் துறை பேராசிரியரும் துறை தலைவருமான டாக்டர் பி.கமலக்கண்ணன், உடற்பயிற்சி இயக்குனர் டாக்டர் கார்த்திகேயன், கணிதத்துறை தலைவர் டாக்டர் கணேசன், இயற்பியல் துறை தலைவர் டாக்டர் சின்னுசாமி, தலைமையில் பயிற்சி முகாம் நடை பெற்றது.

முதலாம் ஆண்டு அனைத்து துறை மாணவிகளுக்கான பயிற்சி முகாமில் சிறப்பு விருந்தினர் களாக மூத்த பத்திரிகையாளர்கள் முரசொலி ஏ.ஹெச்.ஷாகுல் அமீத், டிரினிடி மிரர் ஆர். ரமேஷ் கிருஷ்ணன் ஆகியோர் பத்திரிகை மற்றும் ஊடகத்துறையில் மாணவர்களின் பங்கு என்ற தலைப்பிலும், அரூர் அரசு கலை அறிவியல் கல்லூரி உடற்பயிற்சி இயக்குனர் பி.செந்தில் குமார், விளையாட்டுத் துறை சார்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறையின் நாமக்கல் மாவட்ட வால் சண்டை பயிற்சியாளர் எஸ்.பிரபுகுமார், கால்பந்து பயிற்சியாளர் எஸ்.சதீஷ்குமாரி, கோகோ / கபடி பயிற்சியாளர் புவனேஸ்வரி, ஆகியோர் கலந்து கொண்டு மாணவிகள் விளையாட்டு துறையில், மாணவிகள் அவர்கள் திறனுக்கு ஏற்ற விளையாட்டினை தேர்வு செய்து திறனை வளர்த்துக் கொள்ளும் முறைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

பயிற்சி முகாமில் அனைத்து துறையில் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., அறிவுறுத்தலில் பாகம் எண் 177 நடுத்தெருவில் பொதுக் குழு உறுப்பினர் என்.பரந்தாமன் தலைமையில் பாக முகவர் அறிவழகன் முன்னிலையில் வாக்கு சேகரித்தனர்.உடன் மாதவரம் வடக்கு பகுதி அவை தலைவர் வா.திராவிட வீரன் 17வது வட்ட அவை தலைவர் அ.கோவிந்தராஜ், முன்னாள் தலைவர் குமாரி தேவராஜ், துணை செயலாளர் டி.ஸ்டாலின், பகுதி பிரதிநிதிகள் கு.ராஜா, நா.குமார், துரை பசுபதி, தகவல் தொழில்நுட்பஅணி அமைப்பாளர் ரா.விஸ்வநாதன், ஏ.எஸ்.மாரி, பழ.அயோத்தியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கட்டிமேடு அ. பக்கீர் முகமது

**ஜுலை 9 (2011)**



**இளமைப் பருவம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றி, திருத்துறைப்பூண்டி பகுதியில் பல கிளைக் கழகங்களை உருவாக்கி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.**

**கிளைக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல பொறுப்புகளை வகித்தவர்.**

**1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடன் சிறைக்குச் சென்றவர். தொடர்ந்து மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் கே.இ. சம்பந்தம்

**ஜுலை 9 (1993)**



**நீதிக்கட்சிக் காலம் தொட்டு திராவிட இயக்க பற்றாளராக விளங்கியவர்.**

**வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும், இராயபுரம் பகுதி அவைத் தலைவராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகத்திற்கு சொந்தமாக ஒரு அலுவலக கட்டிடம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபோது, இராயபுரத்தில் ஒரு கட்டிடத்தை முன்னின்று விலைபேசி கழகத்திற்கு வாங்கிட துணைபுரிந்தவர். அக்கட்டிடம் பின்னர் 'அறிவகம்' என்று அண்ணாவால் பெயர் சூட்டப்பட்டு தலைமைக் கழகமாக இயங்கியது**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று ஏழு முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**